2 / DEC 1996
2 / DEC 1996
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 06 சனிக்கிழமை (21-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 25

# காணாமற் போனோர் விவரங்கள்: கோருகிறது விசேட விசாரணை குழு

## நேரில் விசாரிக்க அடுத்த மாதம் யாழ். வருகிறது

யாழ்ப்பாணம், டிசம்பர் 21

குடாநாட்டில் காணாமற் போனோர், கைது செய்யப்பட்டோர் குறித்த முறைப்பாடுகளை நேரில் விசாரணை செய்வதற்காக, பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் கொண்ட விசேட விசாரணைக் குழு அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வருகின்றது. அதன் பொருட்டு காணாமற் போனவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விவரங்களை அறியத்தருமாறு கோரப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரால் கைது செய்யப்படுவோர் மற்றும் காணாமற் போவோர் குறித்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக —

பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட விசேட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக் குழுவின் தலைவராக, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பந்துல குலதுங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

விசேட விசாரணைக் குழுவினருடன் யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் நடத்திய கலந்தாலோசனையைத் தொடர்ந்து —

காணாமற் போனவர்களின் விவரங்களைத் தனித்தனியாக அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

விவரங்கள் திரட்டப்பட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல் சேவை

யாழ்ப்பாணம், டிச.21

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் இன்று காங்கேசன் துறைக்கு வரும் பயணிகள் கப்பல் இன்றே திரும்பவிருக்கிறது.

இக்கப்பலில் ஒரு தொகுதி பயணிகள் செல்ல இருப்பதால் சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்தவர்களில் பட்டியல் இல. 196க்கு உட்பட்டவர்களை இன்று காலை 7.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-3-4)

## ரோந்து சென்ற படையினர் மீது நேற்றுக்காலை புலிகள் தாக்குதல்

### அனுராதபுரம் பகுதியில் 6 படையினர் பலி

கொழும்பு, டிச. 21

ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 6 படையினர் கொல்லப்பட்டனர்.

அனுராதபுரம் மாவட்டத்தில் ஹெப்பிட்டிக்கொலாவ — தித்தனக் கொனாவ வீதியில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

இந்தத் தாக்குதலில் 12 படையினர் காயமடைந்தனர் என்றும் —

படையினரின் நான்கு வாகனங்கள் சேதமடைந்தன என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் இந்த தாக்குதலில் 10 படையினர் கொல்லப்பட்டதாகவும்— படையினரின் மூன்று வாகனங்கள் புலிகளால் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் —

படையினருடன் சென்ற வழிப் பயணியான பெண் ஒருவரும் உயிரிழந்ததாகவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## செய்திச் சாரம்

### வெட்டுப்புள்ளி மாத இறுதியில்

1995 ஓகஸ்ட் மாதம் நடந்த ஜி, சீ. ஈ. (உயர் தர) பரீட்சையில் தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி இம் மாத இறுதியில் வெளிவரவிருக்கிறது.

இந்தக் கல்வி ஆண்டுக்கு நாடெங்கிலும் உள்ள 12 பல்கலைக்கழகங்களுக்கும் 11 ஆயிரத்து 200 மாணவர்கள் அனுமதி பெறவுள்ளனர்.

### பொலீஸ் அதிகாரி காயம்

மட்டக்களப்பு நகரில் உள்ள பொலீஸ் காவல் நிலையம் ஒன்று நேற்று முன் தினம் இரவு விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளானது.

விடுதலைப் புலிகள் இந்தப் பொலீஸ் காவல் நிலையம் மீது குண்டு ஒன்றை வீசிவிட்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது, ஒரு பொலீஸ் அதிகாரியும், 2 சிவிலியன்களும் காயமடைந்தனர்.

[இ-3]

### சஹபந்துவுக்கு பதவி உயர்வு

களுவாஞ்சிக்குடியில் தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரின்டென்ட் உபாலி சஹபந்து பிரதிப் பொலீஸ் மா அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவரது இறுதிக்கிரியைகள் இராணுவ மரியாதையுடன் நேற்று கொழும்பில் நடைபெற்றன.

(இ-3)

### கிரான் பகுதியில் சிப்பாய் பலி

கொழும்பு, டிச. 21

கிரான் இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள தகவல் கோபுரம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் மாலை புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இத்தாக்குதலில் காயமடைந்த மற்றும் ஒருபடையினர் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ- 3)

### உயர் நீதிமன்ற தீர்ப்பு நிறுத்தி வைப்பு

புதுடில்லி, டிச. 21

உத்தரப் பிரதேசத்தில் ஜனாதிபதி ஆட்சிப் பிரகடனத்தை ரத்துச் செய்து உயர் நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பை உச்ச நீதிமன்றம் (சுப்ரீம் கோர்ட்) நேற்று நிறுத்தி வைத்தது.

இந்திய அரசாங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு விண்ணப்பம் ஒன்றை உச்ச நீதிமன்றம் நேற்று அனுமதித்தது.

(இ-4)

### துப்பாக்கி சூட்டில் இளைஞன்மரணம்

யாழ்ப்பாணம், டிச. 21

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

சாவகச்சேரியில் கடந்த புதன்கிழமை இரவு இடம் பெற்ற இச் சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த கந்தையா விஜயானந்தன் (வயது 21) என்ற இளைஞனே மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மீசாலையில் நடைபெற்ற சுற்றிவளைப்பின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இவர் விசாரணையின் பொருட்டு சாவகச்

( 8ஆம் பக்கம் பார்க்க)

## புத்தி சிறீவர்த்தனா ஜனாதிபதியால் நீக்கம்!

கொழும்பு, டிச. 21

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மேலதிக அத்தியாவசிய ஆணையாளராகக் கடமையாற்றி வந்த ஏயர் கொமாடோர் டி.பி.சி. புத்தி சிறீவர்த்தனா அந்தப் பதவியில் இருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்டுள்ளார்.

வடக்குக்கு கப்பல் மூலம் பொருள்களை அனுப்பும் பணிக்கு இவர் பொறுப்பாக நீண்டகாலமாகப் பணியாற்றினார்.

வடக்கில் உணவுப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இவர் ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

(இ-3)

## தமிழ்நாட்டில் ராக்கிங் தடை!

சென்னை, டிச. 21

தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் பகிடி வதை (ராக்கிங்) தடை செய்யப்பட்டுள்ளது.

இதற்கான தடை உத்தரவை தமிழக ஆளுநர்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக பாட்டாளிகட்சி பேரணி நடத்தும்

பெப்ரவரி முதலாம் திகதி இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக சென்னை நகரில் மாபெரும் பேரணி ஒன்றை நடத்தப் போவதாகவும்—இதில் பல்வேறு கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ள இருக்கிறார்கள் என்றும்—பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் செய்தியாளர்களிடம் நேற்றுக் கூறினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மக்களுக்குப் புரிய வைக்கவும் இந்தப் பிரச்சினையின்பால் இந்திய அரசின் கவனத்தை ஈர்க்கவுமே இந்தப் பேரணி நடத்தப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

[இ-4]

### முச்சந்தி முரளி




ராவ், ஜெயலலிதா வரிசையில் பூலான்தேவிக்கும் கஷ்டகாலம் பிடிச்சிருக்குப் போல!

### பூலான்தேவியை கைது செய்ய உத்தரவு

புதுடில்லி, டிச. 21

இந்தியாவின் முன்னாள் கொள்ளைக்காரியான பூலான்தேவியைக் கொலை, கொள்ளைகள் போன்ற 55 குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யுமாறு அலஹாபாத் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பூலான்தேவியை விசாரணை

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் தி. நிருஷன்

திருவருள்நாதன் - குமுதினி தம்பதியரின் செல்வப் புதல்வன் நிருஷன் இன்று (21-12-1996) தனது முதலாவது பிறந்த நாளை சுவிட்சர்லாந்தில் கொண்டாடுகின்றார்.

செல்வன் நிருஷன் அவர்களை அப்பா, அம்மா, சித்தப்பாமார், சித்திமார் மற்றும் சாவகச்சேரி, நுணாவில் மேற்கைச் சேர்ந்த அம்மம்மா, கிரிமாமா, பகீர்மாமா (சவூதி), ஸ்ரீ மாமா, புவிமாமா, குபேந்தாச் சித்தி, றாசிச்சித்தி, றசனிச் சித்தி, பாமினிச் சித்தி, அச்சுவேலி பயித்தோலையைச் சேர்ந்த அப்பம்மா, இலச்சிநாதச் சித்தப்பா, மாமாமார், அத்தைமார், மச்சான், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் யாவரும் பல்கலையும் கற்று சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என்று உளமார வாழ்த்துகின்றார்கள்.

அறிவிப்பு: ச. கிரிதரன்

(44257)

## யா/இராமநாதன் கல்லூரி

### ஆண்டு 12 - 1998 - 1999

**வர்த்தகம், கலைப்பிரிவுகளுக்கான அனுமதி**

ஆண்டு **12** மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய படிவத்தினை அலுவலகத்தில் பெற்று **30-12-96** க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**அதிபர்,**
**யா/இராமநாதன் கல்லூரி,**
சுன்னாகம்.

(சி/3780)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கந்தையா பாலசிங்கம்
[இளைப்பாறிய அதிபர்]

அரியாலை மண்ணில் 1928 - 08 - 20 ஆம் திகதி அமரர் கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் அருமை மகனாகப் பிறந்து நல் வாழ்வில் இணைந்து ஓமந்தை மண்ணில் இடம்பெயர்ந்து அல்லலுடன் வாழும் வேளை 1996 - 11 - 21 ஆம் திகதி உன் குடும்பத்தார்., சகோதரர்கள், உறவினர்களைப் பிரிந்து விண்ணுலகம் சென்றனையோ? இங்கு உன் பிரிவால் நாங்கள் புயலிலே சிக்கிய பூவானோம். ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
**திருமதி. கிருஸ்ணபிள்ளை நகுலேஸ்வரி**
**குடும்பத்தார், சகோதரர்கள்,**
**உறவினர்கள்.**

248, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை.

(9103)

## இதய அஞ்சலி

எமது சக மாணவன் **சி. அகிலனின்**
தந்தையார்

### திரு. ஆ. க. சிவஞானம்

அவர்கள் 18-12-96 அன்று லண்டனில் இறைபதம் எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**13ஆம் அணி மாணவர்கள்,**
**யாழ். மருத்துவபீடம்.**

(9101)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், டிச. 21

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தாவின் 82 ஆவது ஜெயந்தி விழாவும், சிவானந்தா சிறுவர் பாடசாலையின் 23 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

அன்று தையற் பயிற்சி வகுப்பும் ஆரம்பமாகும். (இ-10)

## வன்னியில் சுகாதார வாரம்

மாங்குளம், டிச. 21

அவசர சுகாதார வாரம் ஒன்று வன்னியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியுள்ள இந்த சுகாதார வாரம் நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக வன்னியில் பல பகுதிகளிலும் கொண்டாடப்பட்டது.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுக்கழக முன்பள்ளி ஆசிரியர்கள் மத்தியில் சுகாதார வசதிகள், மக்களைக் காப்பாற்றுவதற்கான அறிவுறுத்தல்கள், சுற்றாடல் சுகாதாரம் போன்றவை விளக்கப்பட்டன.

சுகாதாரம் தொடர்பான வீதி நாடகங்களும் இடம் பெற்றன. (இ-3)

## ஊர்காவற்றுறை ஓய்வூதிய வவுச்சர்கள்

ஊர்காவற்றுறை, டிச. 21

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஓய்வூதியர்களின் டிசம்பர் மாத கொடுப்பனவுக்கான பற்றுச் சீட்டுக்களும் உறுதிச்சீட்டுக்களும் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## புலமைப் பரிசில் 1997

22 - 12 - 96 ஞாயிறு வழமை போல, பயிற்சிப் பரீட்சை நடைபெறும். வினாத்தாள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

**BOND**
**INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(9091)

## HY-STYLE

- ★ கேக் ஐசிங்
- ★ திருமண கேக் ஐசிங்
- ★ சீனி மலர்

**புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

தொடர்பு:
பெந்தகோஸ்த வீதி,
[இலங்கை பெந்தகோஸ்த சபை முன்]
கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

(44220)

## கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சை

இதற்கான வழிகாட்டல் பயிற்சி எதிர்வரும் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் நடைபெறும்.

விவரங்களுக்கு:

இயக்குநர்,
**கோப்பாய் கல்வி நிலையம்,**
மானிப்பாய் வீதி,
கோப்பாய்.

(9102)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆறுமுகம் வள்ளியம்மை
(அல்வின் வீதி, காரைநகர்)

காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் உச்சியோடையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வள்ளியம்மை 19 - 12 - 96 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் ஆறுமுகத்தின் மனைவியும், மனோன்மணி, வனிதாமணி, இந்திராணி, முருகலிங்கம், செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி (ஆசிரியர்), கதிரவேலு, இராசையா (புனர்வாழ்வு), நாகராசா (பாஹ்ரேன்), இந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20-12-96) வெள்ளிக்கிழமை மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்,
ஆ. முருகலிங்கம்
(மகன்)

(9097)

## திருமதி இராசம்மா சுப்பிரமணியம்

ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி இராசம்மா சுப்பிரமணியம் 19-12-96 வியாழக்கிழமை இரவு 12-30 மணியளவில் காலமானார்.

அன்னார் ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியத்தின் (ஆசிரியர் — யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை) அன்பு மனைவியும், இராசகுமார் [சுவிஸ்], நிர்மலா, ஸ்ரீறஞ்சினி, மோகன், பிரபாகரன், றாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமியின் [நன்னடத்தை அதிகாரி] அன்புச் சகோதரியும், வள்ளியம்மாள், பத்மேஸ்வரி, சகுந்தலா, தருமலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 20 - 12 - 96 இல் [நேற்று] நடைபெற்று பூதவுடல் மயிலியதனையில் உள்ளமயானத்தில் பி.ப.2.00 மணியளவில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
ஆ. சுப்பிரமணியம்.
[கணவன்]

வேலை காடு,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(9097)

## V. J. போல்
(ராஜா கிறீம் ஹவுஸ் ஊழியர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட V.J. போல் 19-12-1996 இல் காலமானார்.

இவர் றூபிபபாவின் அன்புக்கணவரும், லில்லி அன்ரனின் சகோதரனும் காலஞ்சென்ற லில்லி அந்தோனிப்பிள்ளை, றோஸ்பிரான்சிஸ் ஆகியோரின் மைத்துனரும் திருமதி மரியதாஸ் (கிளி) ராஜகுலேந்திரன், ரஜனி, சறோ ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (20-12-1996) கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தகவல்:-
றூபி பபா
(மனைவி)

14/1, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(44246)

## ஆறுமுகம் கணபதிப்பிள்ளை சிவஞானம்
(அரச மரக்கூட்டுத்தாபன முன்னாள் ஒப்பந்தக்காரர்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஆ.க. சிவஞானம் அவர்கள் 18-12-96 புதன்கிழமை இங்கிலாந்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (24-12-96) இங்கிலாந்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க.சி. அகிலன்
(மகன்)

171A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(44255)

## திருமதி மகேஸ்வரி குணரத்தினம்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை மகேஸ்வரி குணரத்தினம் (மதி) 16 - 12 - 96 அன்று இறைபதம் எய்திவிட்டார்.

இவர் ஓய்வுபெற்ற அதிபர் குணரத்தினத்தின் அன்பு மனைவியும், சரஸ்வதி, காலஞ்சென்ற சண்முகநாதன், நாகேஸ்வரி, ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினேஸ்வரன், இரத்தினகுமார் (டென்மார்க்), இரத்தினபாலா, இரத்தினராசா (கோட்டக்கல்வி அலுவலகம், சண்டிலிப்பாய்), இரத்தினமாலா (நீர்ப்பாசனத் திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்லம்மா, கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாந்தினிதேவி, சிறிகலா, கணேஸ்வரி, செல்வசுதா ஆகியோரின் அன்பு மாமியும், பிரதீபன், பிரசன்னா (டென்மார்க்), லக்ஸ்சாந்தி, லாவண்யா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17-12-96 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. குணரத்தினம்

''இரத்தின பவனம்''
சண்டிலிப்பாய்.

(9100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible]

# அரசாங்கப் படைகளுடன் இணைந்து செயலாற்ற வேண்டிய அவசியம் ஏன்?

## தமது பக்கக் கருத்தை விளக்குகிறார் டக்ளஸ் தேவானந்தா

தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கொழும்பு ஆங்கில வார இதழான "சண்டே லீடர்'' பத்திரிகைக்குக் கடந்த வாரம் பேட்டியளித்தார். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி:- வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளின் பாதுகாப்பு நிலையை எவ்வாறு மதிப்பீடு செய்கின்றீர்கள்?

டக்ளஸ்:- அரிசியில் கல் இருப்பது போல புலிகளின் ஊடுருவல் அங்கு உள்ளது. மக்களின் பாதுகாப்பையும் அவர்களின் ஆதரவைப் பெறுவதையும் உறுதிப் படுத்தும் விதத்திலான நடவடிக்கைகளையே அரசு அங்கு எடுக்க வேண்டும் என நாம் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகின்றோம். அதுதான் சிறந்த வழி. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அப்படி நடக்கவில்லை. படையினரால் மக்கள் ஒதுக்கப்படுகின்றார்கள்.

'விடுதலைப் புலிகள்தான் மக்கள்; மக்கள்தான் விடுதலைப் புலிகள்' — என்பதுதான் புலிகளின் சுலோகம்.

இந்த மாயை உண்மையே என்பதைக் காட்டுவது போல படையினரின் நடவடிக்கைகள் உள்ளன.

கேள்வி:- தற்போதும் படையினரின் அத்துமீறல்கள் இடம்பெறுகின்றனவா?

டக்ளஸ்:- எமக்குக் கிடைக்கும் தகவல்களின்படி படையினரின் அத்துமீறல்கள் தொடர்கின்றன. கிருஷாந்தி வழக்கும் காணாமற்போன இளைஞர்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கம் கவனத்துடன் எடுத்தியம்பும் சம்பவங்களும் இவற்றுக்கு உதாரணங்கள்.

இத்தகைய சம்பவங்கள் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்துவதுடன் அவர்கள் வளரவும் உதவுகின்றன.

கேள்வி:- கடந்த சிலமாதங்களில் காணாமல் போன 543 இளைஞர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை யாழ். அரசாங்க அதிபர் அண்மையில் மனித உரிமைகள் செயலணிக் குழுவின் தலைவர் ஸி. ரி. ஜான்ஸிடம் கையளித்துள்ளார். இத்தகைய சம்பவங்கள் வடக்கில் நிகழும் போது தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தங்கள் கட்சி, அரசுடன் சேர்ந்து அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை ஆதரித்து வாக்களிப்பதை எப்படி நீங்கள் நியாயப்படுத்த முடியும்?

### தனி றெஜிமண்ட்

டக்ளஸ்:- உங்கள் கேள்வி நியாயமானது. விடுதலைப் புலிகள் 'பாஸிஸ்ட்' அமைப்பு என்பதால் அவசர காலச்சட்டம் நீடிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் கருத்து. ஆனால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கற்பழிப்பதையோ, மக்கள் காணமல் போவதையோ, அது போன்ற அத்துமீறல்களையோ நீங்கள் நியாயப்படுத்த முடியாது.

போரும் அதை எப்படி அணுகுவதும் என்பதுதான் பிரச்சினை. வண்டிக்கு முன் குதிரையைப் பூட்ட வேண்டும் என்பதே எமது கருத்து. ஆனால் இங்கு மாறி நடக்கின்றது. படையினர் தம்மைப் பாதுகாக்கும் நிலையைக் கைக்கொண்ட படி, தீர்வுக்கான திட்டம் ஒன்றை முன்வைத்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இத்தகைய திட்டத்தை படைகள் நடைமுறைப் படுத்தி, அதனைப் புலிகள் குழப்பினால், படைகள் மக்களை தங்களுடன் இணைத்துக் கொண்டு புலிகளை வெல்லலாம்.

ஆனால் அங்குள்ள மக்கள் முட்புதருக்குள் தூக்கி வீசப்பட்டுள்ள நிலையில் இப்போது இருக்கின்றார்கள்.

இந்தக் காரணத்துக்காகத் தான் தமிழ் பேசும் தனி 'றெஜிமெண்ட்' ஒன்று அமைக்கப்பட வேண்டும் என நான் வலியுறுத்தி வருகின்றேன்.

தற்போது படைகள் எடுக்கும் நடவடிக்கைகள் ஸ்ரீலங்காப் படைகளினுடையவை அல்ல; சிங்களப் படையினுடையவை போன்றவை.

நாட்டில் நிலவும் இன விகிதாசாரத்தைப் பிரதிபலிப்பவையாக தற்போது படையின் கட்டமைப்பு இல்லை.

அதனைச் சரியாக்குவது உடனடியாகச் சாத்தியமில்லாவிட்டாலும் இது மிக அவசியமானது.

ஏனைய தமிழ்க் கட்சிகள், இளைஞர்கள், மற்றும் ஏனையோரின் முழு ஆதரவுடன் சரியான ஓர் அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் இது குறித்து நாம் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரலாம்; அதனைச் செயற்படுத்தலாம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டம் சிங்களவர் ஆதிக்கம் மிக்க படைகளுக்கு மட்டும் உரியதாக இல்லாமல், நான் முன்னர் குறிப்பிட்ட ஏனைய சக்திகளையும் கொண்டதாக இருக்கலாம்.

சிங்களவர்களை மட்டும் கொண்ட படையாக இருந்தால் இப்பகுதி மக்கள் அதனைச் சந்தேகத்துடன்தான் நோக்குவார்கள்.

விடுதலைப் புலிகள் தொடர்பாக ஈ. பி. டி, பியின் நிலைப்பாடு எப்போதும் தெளிவானது. ''இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேசுங்கள்!'' என்றே ஏனைய தமிழ்க் கட்சிகள் கூறுகின்றன.

ஆனால் எமது அமைப்பு ''தமிழ் மக்களின் மனக்குறைகள் விடுதலைப் புலிகள் பிரதிபலிக்கும் கருத்திலிருந்து வேறானவை. விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் ஒழிக்கப்பட வேண்டும்.'' என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

கேள்வி:- அதாவது கிளர்ச்சியை அடக்குவதற்கு 1972 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் 1989 இல் ஐக்கிய தேசியக் கட்சியும் பின்பற்றிய நடவடிக்கை சரி என்று நீங்கள் கூறுகின்றீர்களா?

டக்ளஸ்:- அத்தகைய விவாதத்தில் பங்குபற்ற நான் விரும்பவில்லை. ஆனால் இரண்டு கட்சிகளாலும் பல தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஜே. வி. பி. விவகாரத்தில் ஜே. வி. பியும் பாதுகாப்புப் படையினரும் ஒரே மொழி பேசும் அமைப்புகளாக இருந்தன.

ஆனால் இப்போதைய பிரச்சினையில் அடக்குபவர்கள் ஒரு மொழியினராகவும் அடக்கப்படுபவர்கள் ஒரு மொழியினராகவும் உள்ளனர்; இங்கு இனவாரியாக உள்ளனர்.

1972 இல் என்றாலும் 1989 இல் என்றாலும் பெரிய அளவில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

அழகி மனம்பெரி சிங்களப் பெண் என்றாலும், கிருஷாந்தி தமிழ் யுவதி என்றாலும் இரு கொலைகளிலும் நான் எந்த வேறுபாட்டையும் காணவில்லை. இரண்டும் மனிதாபிமானமற்ற — காட்டுமிராண்டித்தனமான — செயல்களே.

கேள்வி:- மனித உரிமை மீறல்கள் குறித்து பேசுகிறீர்கள். வடக்கு - கிழக்கு மக்கள் வாழும் அந்தப் பகுதிகளில் மனித உரிமை மீறல்கள் அண்மையில் இடம் பெற்றிருக்கும் போது — அரசாங்கத்தை ஆதரித்து விட்டு — இறுதியாக அந்த மக்களிடம் போய் தேர்தலில் நீங்களே எப்படி வாக்குக் கேட்கப் போகின்றீர்கள்?

டக்ளஸ்;- முதலாவதாக— ஐ. தே. கட்சியோ அல்லது பொது மக்கள் ஐக்கிய முன்னணியோ — எது வென்றாலும் — பாஸிஸத்தை ஒழிப்பதற்காகவே அவற்றின் அரசுகளை நாம் ஆதரிக்கின்றோம். அது ஜே. வி. பியின் பாஸிஸமாக இருக்கலாம்; அல்லது விடுதலைப் புலிகளின் பாஸிஸமாக இருக்கலாம். அந்தப் போக்கை அழிக்க வேண்டும் என்பதே நாம் வழங்கும் ஆதரவின் அடிப்படையாகும்.

இரண்டாவதாக — தமிழ் மக்களுக்கு சில மனக்குறைகள் உள்ளன. அவை அரசியல் ரீதியாக தீர்க்கப்பட வேண்டும் என ஆட்சிக்கு வர முன்னர் சந்திரிகா கூறியிருந்ததும் காரணமாகும்.

இவை தான் அடுத்தடுத்து வந்த அரசுகளுக்கு — குறிப்பாக — சந்திரிகா அரசுக்கு நாம் ஆதரவளித்ததற்கு முக்கிய காரணங்களாகும்.

இந்த விடயங்களில் அரசு எதிர் கொள்ளும் பிரச்சினைகளை நாங்கள் உணர்கின்றோம். நாங்கள் மேலும் சில காலம் பொறுத்துப் பார்க்கலாம் எனக்கருதுகின்றோம்.

நாங்கள் ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்துவிட்டோம்; மீண்டும் காட்டுக்குத் திரும்பிச் செல்ல முடியாது. எனவே ஜனநாயக கட்டமைப்புக்குக் கீழ்தான் நாம் செயற்பட வேண்டியுள்ளது.

முன்னர், எமக்கு பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் நாம் துப்பாக்கியைத் தூக்குவதுதான் வழமை. ஆனால் இப்போது நாம் மரபு வழி அரசியல் நடவடிக்கைகளுக்கு ஊடாக செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம். அதற்காக இப்போதைய நடவடிக்கைகளை நாம் நியாயப்படுத்தி விட முடியாது.

கைது செய்யப்படும் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மனிதாபிமான ரீதியில் நடத்தப்பட வேண்டும்; அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட வேண்டும்.

தங்களால் பிடிக்கப்படும் பாதுகாப்புப் படையினரை புலிகள் கொடூரமாக நடத்துகின்றார்கள் என்பதற்காக, பிடிபடும் புலிகளையும் நாங்கள் அப்படி நடத்த முடியாது.

விடுதலைப் புலிகளால் பிடிக்கப்படும் படையினரை விட, விடுதலைப் புலிகளால் பிடிக்கப்படும் மாற்றுத் தமிழ்க் குழு உறுப்பினர்களே கூடியளவு கொடூரமாக நடத்தப்படுகின்றார்கள்.

அத்தோடு புலிப் பயங்கரவாதிகள் வெளியாள்கள் அல்லர். அவர்களும் ஸ்ரீலங்காவினரே. றோஹண விஜேவீர என்றாலும் — பிரபாகரன் என்றாலும் — அவர்கள் பாஸிஸ கொள்கையைப் பின்பற்றினாலும் — அவர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்களே.

எனவே சிங்களவர் என்றாலும் தமிழர் என்றாலும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் நாமும் தவறு இழைத்திருக்கின்றோம் என்பதையும் எமது பங்கு பணியைச் சரியாக ஆற்றவில்லை என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

எங்களை அணைத்துக் கொள்ள படைகள் தயாராக இல்லாவிட்டாலும் — அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் ஏற்கமுடியாதவையாக இருந்தாலும் — அதற்கான சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் புலிகளை அழிக்கக் கூடிய ஒரே சக்தி பாதுகாப்புப் படைகள்தான். அவர்களுடன் இணைவதன் மூலம் தற்போதைய சூழ்நிலையை நாம் நேர்படுத்த முடியும். இதற்கு அப்பால் ஏதேனும் நடவடிக்கை இருப்பதாக எங்களால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை.

பாதுகாப்புப் படைகளுடன் இணைவதன் மூலமே விடயங்களை நேர்சீர்படுத்த முடியும் என நாம் கருதுகிறோம்.

தமிழ் மக்களின் அபிலாசைகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அபிலாசைகளில் இருந்து வேறானவை என்பதையும் நாம் நிரூபிக்க வேண்டும்.

கேள்வி:- ஜே. வி. பியின் 1989—1991 காலப்பகுதியில் காணாமற் போனோர் குறித்து விசாரிக்க ஆணைக் குழு ஒன்றை ஜனாதிபதி ஏற்கனவே நியமித்துள்ளார். வடக்கிலும் காணாமற் போனோர் விடயத்தைக் கவனிக்கக் கூடியதாக அந்த ஆணைக்குழுவின் எல்லை விஸ்தரிக்கப்பட வேண்டும் என நீங்கள் கருதுகின்றீர்களா?

டக்ளஸ்:- ஆம். அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் அதனைக் கோரப்போகின்றன என நான் நினைக்கின்றேன்.

கேள்வி:- எவ்வளவு விரைவில் கேட்பீர்கள்?

டக்ளஸ்:- உடனடியாக. மனித உரிமைகள் ஆணைக் குழு ஒன்றை நியமிக்கப் போவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அந்த ஆணைக் குழுவும் இந்த விடயங்களைக் கவனிக்கலாம்.

[தொடரும்]

## திருமலை நகர் சுற்றிவளைப்பு!

திருகோணமலை நகரம் வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் திடீரென முற்றுகையிடப்பட்டது.

படையினரும், பொலீஸாரும் இணைந்து நகரில் உள்ள சகல சந்திகளிலும்ஒரே நேரத்தில் சோதனைகளை மேற்கொண்டனர்.

தேடுதலில் எவரும் கைது செய்யப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் திருகோணமலை நகருக்குள் ஊடுருவியிருப்பதாக கூறப்படும் தகவலையடுத்து கடந்த ஒருவாரமாக திருகோணமலை நகர் திடீர் திடீரென சுற்றி வளைக்கப்பட்டு நகரில் தேடுதல் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-150-3)

## மலையக கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் பட்டியல்?

### சந்திரசேகரன் யோசனை

கொழும்பு, டிச. 21

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல்களில் மலையகத்தில் இயங்கும் சகல கட்சிகளும், அமைப்புக்களும் இணைந்து பொதுவேட்பாளர் பட்டியலில் போட்டியிட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி முடிவு செய்துள்ளது.

பிரதி அமைச்சர் எஸ். சந்திரசேகரன் தலைமையிலான இம்முன்னணி கடந்த புதன் கிழமை கூடி உள்ளூராட்சித் தேர்தல்களில் மலையகக் கட்சிகளின் பங்குபற்றி ஆராய்ந்து மேற்கண்ட முடிவை எடுத்தது.

தற்போதைய நாட்டு நிலைமை, மலையக மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் ஆகிய பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டே இந்த முடிவை எடுத்துள்ளதாக முன்னணி தெரிவித்துள்ளது.

அதே சமயம் இ. தொ. காவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பொதுப் பட்டியலில் போட்டியிட வைக்க, அரசு முயற்சி எடுத்து வருகிறது. (இ-3)

## கல்முனையில் திடீர் ஊரடங்கு

மட்டக்களப்பு, டிச. 21

கல்முனை, சம்மாந்துறை பிரதேசங்களில் கடந்த புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு உத்தரவைப் படையினர் பிறப்பித்தனர்.

இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. மாலை 4 மணியுடன் ஊரடங்கு நீக்கப்பட்டதும் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

ஊரடங்கு அமுலில் இருந்த சமயத்தில் கல்முனைக்கு மேற்கேயுள்ள பகுதியூடாக இராணுவ அணி ஒன்று வேறிடம் நோக்கிச் சென்றதாகக் கூறப்பட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தொண்டைமானாறு
## சந்நிதியான் ஆச்சிரம
## சைவ-கலை-பண்பாட்டுப் பேரவை
நடத்தும்
# திருவாசக விழா

காலம்: நாளை (22 - 12 - 1996) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9-00 மணி தொடக்கம்

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய
சுவாமிகளின் ஆசியுடன்

வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை
அவர்களின் தலைமையில் நிகழும்.

ஆசியுரை: ஷி பேரவையின் போஷகர்கள்

மங்கள இசை:
எல். ஜெயநாதன் குழுவினர்

சிறப்பு விருந்தினர் உரை; திரு. சி. முருகேசம்பிள்ளை
(இளைப்பாறிய அரச அதிபர்)

சொற்பொழிவுகள்:

★ "திருவாசகம் என்னும் தேன்"
ஆசிரியர் திரு. ஆறு. திருமுருகன்

★ "வாழாத நெஞ்சமே"
ஆசிரியர் ஆ. சிவநாதன்

★ "புகவே தகேன்"
திரு. ச. விநாயகமூர்த்தி
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

★ "துணையிலி பிண நெஞ்சே"
திரு. சிவ. மகாலிங்கம்
(விரிவுரையாளர், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

கலை நிகழ்வுகள்;

1. தொண்டைமானாறு மகாவித்தியாலய மாணவ, மாணவியர் நிகழ்த்தும் கலை நிகழ்வு.

2. ஞானபண்டித இசையரசு, சங்கீதபூஷணம்
திரு. செ. குமாரசாமி அவர்களின்

## இசை விருந்து

பக்கவாத்தியம்:
வயலின் - **பிரம்மஸ்ரீ தியாகராஜ சர்மா** அவர்கள்
மிருதங்கம் - **வித்துவான் ச. ஹரிகரன்** அவர்கள்

3. திருவாசகப் பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கல்.
வழங்குபவர்: **திரு. செ. ஸ்ரீநிவாசன்** அவர்கள்
(உதவி அரசாங்க அதிபர், கரவெட்டி)

4. நன்றியுரை.

-- ஷி பேரவையினர்.

(சி-3763)

# உதயன் அக்கடமி
(கமலாசனி வித்தியாலயம் முன்பாக)
மட்டுவில், சாவகச்சேரி.

## புதிய கல்வி ஆண்டு 97 ஆரம்பம்
ஆண்டு 6 முதல் O/L வரை

எமது ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| கணிதம் | திரு. S. வசந்தன் |
| விஞ்ஞானம் | திரு. S. லலீசன் |
| | திரு. K. பிரபா |
| சமூகக்கல்வி | திரு. P. P. சந்துரு |
| தமிழ் | திரு. K. K. ஈஸ்வரன் |
| | திரு. பார்த்தீபன் |
| ஆங்கிலம் | திரு. S. நரேந்திரன் |
| | திரு. V. விஜயன் |
| வர்த்தகம் | பிரபல ஆசிரியர் |

நிர்வாகி.

(44197)

# பண்டிகைக் கால
# பாதணி விற்பனை

★ இறக்குமதி செய்யப்பட்ட பாதணி வகைகள்
★ பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்து வகைகள்
★ நவீன மோஸ்தர்களிலான ஆடவர் மகளிர் பாதணிகள் (D. S. I, BATA, RANPA)

மற்றும்

★ பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்:

## கல்யாணி
இல. 9, நவீன சந்தை உட்புறம்,
சாவகச்சேரி.
(வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்)
(சி-3771)

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் **சி. றஜந்தனின்**
தந்தையார்

## திரு. க. சிவஞானம்

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

96ஆம் ஆண்டு கணிதப்பிரிவு மாணவர்கள்,
**யாழ். இந்துக் கல்லூரி.**
(9099)

# 2555 ஆம் நாள் நினைவலைகள்



## திருமதி சரஸ்வதிஅம்மா கிருஷ்ணன்

மீளாத் துயில் கொண்டு
ஏழாம் ஆண்டு வந்ததுவே
ஆறாத் துயர் கொண்டு
ஆறவில்லை உன் நினைவு.

ஐ. கிருஷ்ணன்

24, இந்திராபுரம்,
முகமாலை.
(சி/3770)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# சரத்பவார் உட்பட பலர் ராவின் பதவிக்குப் போட்டி!

## திங்களன்றே தெரிவு இடம் பெறும்

புதுடில்லி, டிச. 21
காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவிக்கு காங்கிரஸின் முன்னணிஅரசியல் வாதிகளான சரத் பவார், ராஜேஸ் பைலட், மன்மோகன்சிங் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

காங்கிரஸ் கட்சியின் தற்போதைய தலைவர் சீதாராம் கேசரியும் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் கண் வைத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

போட்டியில் தாமும் நிற்பதாக ராஜேஸ் பைலட் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி சக்தி வாய்ந்த ஒரு பதவியாகும்.

தற்போதைய அரசு பதவி இழக்கும் நிலை உருவாகி காங்கிரஸ் கட்சி அரசை அமைக்கும் நிலை தோன்றும் பட்சத்தில் பிரதமராகும் வாய்ப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவருக்கே அதிகமாக இருக்கும்.

அதே சமயம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து நரசிம்மராவ் கீழிறங்கிய பின் உருவாகியுள்ள சூழலை அவதானித்துத் திறனாய்வு செய்ய காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு நேற்றுக் கூடியது,

திங்கட்கிழமை புதிய நாடாளுமன்றக் குழுத் தலைவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

(இ-10)

# 11 சிசுக்களை கருத்தரித்த பெண்!

## நான்கை மட்டும் காப்பாற்றலாமாம்

நிகோஷியா, டிச. 21
சைப்பிரஸில் உள்ள ஒரு பெண் பதினொரு சிசுக்களை கர்ப்பம் தரித்துள்ளார்.

கிழக்கு சைப்பிரஸின் கடற்கரை நகரமான ஆப்போஸில் வசிக்கும் 23 வயதுடை சோல் எக்ஸ்ரோறியோ என்ற இப் பெண் கருத்தரித்திருக்கும் சில சிசுக்களைக் கருச்சிதைவு செய்தால் மாத்திரமே ஏனைய சிசுக்களைக் காப்பாற்றலாம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

4 சிசுக்களைக் காப்பாற்றி ஏனைய சிசுக்களைக் கருச்சிதைவு செய்ய அப்பெண் தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனார். (இ-10)

## பெனாஸிரின் சகா கொலை

இஸ்லாமாபாத், டிச.21
பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அல்ரோப்பையோர் தனது மூன்று சகாக்களுடன் கடந்த வியாழன் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-10)

# பணயக் கைதிகளை விடுவிக்க பாதுகாப்புச் சபை கோரிக்கை

நியூயோர்க் டிச. 21
பெருவில் ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் வெளிநாட்டுத் தூதுவர்களையும், மற்றவர்களையும் கிளர்ச்சிப் படையினர் பணயம் வைத்துள்ளதை ஐ. நா. பாதுகாப்புச் சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

பணயம் வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கும்படி ஐ. நா. பாதுகாப்புச் சபை கிளர்ச்சியாளர்களைக் கேட்டுள்ளது.

''இந்த நடவடிக்கை பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்று. அனைத்துலக சமூகத்துக்கும் எதிரான செயல் இது'' என ஐ. நா. வின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தவர்களில் சில வெளிநாட்டுத் தூதுவர்களையும் கிளர்ச்சியாளர்கள் ஏற்கனவே விடுதலை செய்தது தெரிந்ததே. (இ

ஈசன்
கல்வி நிலையம்
கே. கே. எஸ் றோட்,
கோண்டாவில்.
A|L 97, 98, 99
தமிழ்
ஆசிரியர்: திரு. லிங்கம்
ஆரம்பம்: 23-12-96
திங்கள் 12. 00 a. m
( 44247 )

# போர்பஸ் பீரங்கி கொள்வனவு ஆவணங்கள் இந்தியாவுக்கு

போர்பஸ் பீரங்கி கொள்வனவு தொடர்பான ஆவணங்களையும் —

கடந்த 6 ஆண்டுளாகக சுவிட்சர்லாந்தில் நடத்தப்பட்ட விசாரணையின் முடிவுகளையும் —

இந்திய அரசிடம் ஒப்படைப்பது என கடந்த புதன் கிழமை சுவிட்சர்லாந்து அரசு முடிவு செய்தது.

இந்த ஆவணங்களின் கையளிப்போடு இந்திய அரசியலில் — குறிப்பாக காங்கிரஸ் உட்கட்சி அரசியலில் — பல கொந்தளிப்புகள் உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ- 10)

மருந்தாளர் தேவை

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரிக்கு முன்பாக இயங்கும் இளவரசன் மருந்தகத்திற்கு மருந்தாளர் உடன் தேவை.

நேரில் வரவும். இங்கு வேலை செய்பவர்களுக்கு ஆலோசனை வழங்கினால் போதுமானது.

இளவரசன் பாமசி,
யாழ்ப்பாணம்.

[44249]

# பாராட்டுகிறோம்

கைதடி வடக்கு சிவபவனத்தைச் சேர்ந்த
**செல்வி ரேணுகா சுப்பிரமணியம்**

அவர்கள் பிரித்தானியா கணனி பயிற்சி நிலையத்தின் போட்டிப் பரீட்சையில் அதி விசேட சித்தியைப் பெற்று கணனிப் பயிற்சித் தேர்வுக்கான புலமைப் பரிசிலைப் பெற்றுள்ளார்.

யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவில் சிரேஷ்ட எழுதுநராகக் கடமையாற்றும் **ஆ. சி. சுப்பிரமணியம் தம்பதிகளின்** ஏக புத்திரியான இவர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் பயின்று, 1995 இல் நடைபெற்ற க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் அதி விசேட பெறுபேறுகளை மிகச் சிறந்த முறையில் பெற்றுள்ளதுடன், உயர் கல்வியைக் கற்றுப் பாண்டித்தியம் பெற வாய்ப்பைத் தேடிக் கொண்டார் என்பது சிறப்புக்குரிய விடயமாகும்.

குறிப்பாக இவர் ஆரம்பக் கல்வியை யாழ். சென் ஜோன்பொஸ்கோ வித்தியாலயத்தில் பெற்றுப் புலமைப் பரீட்சை மூலம் தேசிய பாடசாலையான யாழ். வேம்படி மகளிர் கல்லூரியை எட்டிப்பிடிக்கக் கூடிய கல்வியில் உந்தப்பட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நண்பர்கள்,
உறவினர்கள்.

(சி/3772)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய்

# மீள் கேள்வி அறிவித்தல்

## 1997 ஆம் ஆண்டு

## இறைச்சிக் கடைகள், சந்தைகள் குத்தகை

கேள்விப் பத்திரம் வழங்கல் — **1996 - 12 - 27** ஆம்திகதி பி. ப. 3-00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றல் — **1996 - 12 - 30** ஆம் திகதி பி. ப. 1-00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறத்தல் — **1996 - 12 - 30** ஆம் திகதி பி. ப. 2-30 மணி வரை

| குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| **மானிப்பாய் பட்டினம்:** | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை இல. 02 | 250/- | 1,000/- | 100/- | 70,000/- |
| 2. கட்டுடைச் சந்தை | — | 300/- | 100/- | 500/- |
| **மானிப்பாய் கிராமம்:** | | | | |
| 1. நவாலி பிரசாத் சந்தை | — | 1,000/- | 100/- | 16,000/- |
| 2. காக்கைதீவுச் சந்தை | — | 1,000/- | 100/- | 3,850/- |
| 3. ஆட்டிறைச்சிக்கடை நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1,000/- | 100/- | 20,000/- |
| 4. ஆட்டிறைச்சிக்கடை சாவற்கட்டுச் சந்தை | 250/- | 1,000/- | 100/- | 20,000/- |
| 5. கருவாட்டுக்கடை சாவற்கட்டுச்சந்தை | | | | |
| **பண்டத்தரிப்பு கிராமம்:** | 100/- | 500/- | 100/- | 1,000/- |
| 1. மாகியப்பிட்டிச்சந்தை | — | 1,000/- | 100/- | 6,000/- |
| 2. மாட்டிறைச்சிக்கடை மாகியப்பிட்டிச்சந்தை | — | 1,000/- | 100/- | 16,000/- |


மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**இப்பிரதேச சபை எல்லைக்குள் எனது அனுமதியின்றி எவரும் இறைச்சி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.**

**து. வைத்திலிங்கம்,**
**விசேட ஆணையாளர்,**
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
நகரமண்டபம், மானிப்பாய்.
1996 - 12 - 16.
(சி/3769)

# 9 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 02 — 1937
மறைவு: 21 — 12 — 1987

## அமரர் சீ. செல்லத்துரை

(முன்னாள் மேற்பார்வையாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

ஆண்டுகள் ஒன்பது சென்றுவிட்டாலும்
உங்கள் அன்பை நாம் மறப்போமா.
உங்கள் பிரிவால் துயருறும்;

அன்பு மனைவி: தவமணிதேவி
பிள்ளைகள்: ஜெகதீஸ்வரி (இத்தாலி), ஜெயந்தி (ஜேர்மனி), ஜெயஸ்ரீ (ஜேர்மனி), ஜெயகாந்தன் (சுவிஸ்), ஜெயரூபன்.
மருமக்கள்: தர்மரத்தினம் (இத்தாலி), சுபேந்திரன் (ஜேர்மனி),ஜெயானந்தராஜா (ஜேர்மனி), தாரணி (சுவிஸ்)
பேரப்பிள்ளைகள்: நிலூஷா (இத்தாலி), நிக்ஷன் (இத்தாலி), டிலூசன் (ஜேர்மனி), றொபின்சன் (ஜேர்மனி), அதீனா (ஜேர்மனி)
மற்றும் உற்றார், உறவினர்கள்.

''ஈஸ்வரி வாசம்''
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
19-12-96

(44245)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பஷன் பழக்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். கிளிமாமா, சந்தை ஒழுங்கை, நவாலி தெற்கு. (9095)

இறைச்சிக் கோழி சுத்தம் செய்து விற்கப்படும். V.K.M. Farm, இல. 12, கனக சபை லேன், குமாரசாமி ஸ்டோர்ஸ், சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (9098)

Robin (EY - 15) வாட்டப்பம், பஜாஜ் ஸ்கூட்டர், அலுமினியம் ஏணி, கடைப் பாவனைக்கான கண்ணாடி அலுமாரி, வேப்பம் பலகை ஆகியன விற்பனைக்குஉண்டு. மங்களபதி வைத்தியசாலை, சங்கிலியன் வீதி, நல்லூர். (44244)

### விற்பனையாகிறது

வெள்ளி விழாச்செண்டு உங்கள் பிறந்த திகதிப்படி. 97ஆம் ஆண்டு நிகழும் பலாபலன்கள். சோதிடர்: V. A. சிவராஜா, 152B, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். சோதிட விடயங்களுக்கு சந்திக்கலாம். (44176)

### மணப்பெண் தேவை

நோர்வே(Norway) பிரஜா உரிமை பெற்ற, மருத்துவ மனையில் ஆண் தாதியாகக் கடமையாற்றும் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயது, ரோகிணி நட்சத்திர இந்து மகனுக்கு தகுந்த மணப்பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: இல. 568, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (44240)

### புலமைப் பரிசில் ஆண்டு 5

கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் 90 வீத புள்ளிகள் பெறுவதற்கு அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோயிலடி, (சிவன் கோயில் மேற்கு வீதி) திருநெல்வேலி. (44200)

### தேவை

நல்ல நிலையிலுள்ள டீப் பிறிசர் தேவை. ஹொட்டல் றொலக்ஸ், இல. 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (44235)

### ஓகன் வகுப்பு

ஓகன், புல்லாங்குழல், கிற்றார் வகுப்புகள் சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் நடைபெறும். முகவரி: புவனகிரி, ஸ்ரேசன் றோட், கோண்டாவில் (நிரு கல்வி நிறுவனத்திலிருந்து 500 யார் கிழக்கே). (44236)

### மணமக்கள் தேவை

கத்தோலிக்க கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது மகனுக்கும், 32 வயது மகளுக்கும் தகுந்த மணமக்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: இல. 567, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (44239)

இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 36 வயது வங்கி ஊழியருக்கு தகுந்த மணமகளையும் (ஆசிரியை விரும்பத் தக்கது), 33 வயது அழகிய A/L சித்தியடைந்த பூராடம் நட்சத்திர மகளுக்கு தகுந்த மணமகனையும் பெற்றோர் தேடுகின்றனர். மகள் வெளிநாடு செல்லவும் விருப்பம் தொடர்பு: இல. 566,மே/பா உதயன், யாழ்ப்பாணம். (44238)

செவ்வாயுள்ள பெண் டாக்டர்களுக்கும், பெண் பட்டதாரிகளுக்கும் ஏதாவது தொழிலுள்ள மணமகன்கள் 32 வயதிற்கு மேற்பட்டவர்கள் தேவை. பெண்கள் வெளிநாடும் செல்வார்கள் தொடர்பு: நேரில் மு. செல்லப்பா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (44206)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்

**திருமதி க. குலசேகரத்தின்** அன்புச் சகோதரி

## திருமதி நாகேஸ்வரி சோமபாலா

அவர்கள் 18 - 12 - 96 இல் காலமாகி விட்டார். அவரின் பிரிவால் துயருறும் அதிபருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உப- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

யா/ நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை,
சாவகச்சேரி. [44241]

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்ட, கைத்தொழில்,
நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு

# பனை அபிவிருத்திச் சபை

நிர்வாக உத்தியோகத்தர்

# பதவி வெற்றிடம்

பின்வரும் தகைமையுடையோர்களிடமிருந்து நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:-**

க.பொ.த. (சாதாரண பத்திரம்)அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்திபெற்று, நிர்வாகத்துறையில், அரசாங்க நிறுவனம் ஒன்றில் குறைந்தது 20 வருட அனுபவமும், அவற்றுள் குறைந்தது 10 வருடங்கள் நிறைவேற்று தரத்திலும் இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:-**

விண்ணப்ப முடிவு திகதியன்று 45 வயதிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

**சம்பளத் திட்டம்:-**

ரூபா 40,620.00 — 4x780.00 — 12x1200.00 — 58,140/- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தகைமை, அனுபவம் ஆகியவற்றிற்கு சமனான சம்பளத்திட்ட நிலையில் அமர்த்தப்படுவர்.

**தெரிவு செய்யும் முறை:-**

அறிக்கை தயாரித்தல், உத்தியோக பூர்வ கடிதங்கள் எழுதுதல் ஆகிய சம்பந்தமாக நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையிலும், நேர்முகப் பரீட்சையிலும் பெறும் பெறுபேறுகளின் அடிப்படையிலும் அமையும். அரச சேவையில் அல்லது கூட்டுத்தாபன சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தத்தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்கள தலைவர் ஊடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

உரிய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் சான்றிதழ்களின் புகைப்படபிரதிகளுடன்,பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை, தலைமை அலுவலகம், 53, கண்டி வீதி, யாழ்ப்பாணம் அல்லது தலைவர், பனை அபிவிருத்திச் சபை, 244, காலி வீதி, கொழும்பு 4 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 1996 மார்கழி 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**தலைவர்,**
பனை அபிவிருத்திச் சபை.

(சி/3762)

# நினைவஞ்சலிகள்

முதலாம் ஆண்டு 5 ஆம் ஆண்டு





தெல்லிப்பழை, வித்தகபுர விசிட்டியைச் சேர்ந்த

## திருமதி சாரதா நடராசபதி

(காங்கேசன்துறை சிமெந்துக்கூட்டுத் தாபன படவரைஞர் திரு. ந. நடராசபதி அவர்களின் மனைவி)

தோற்றம்: **30 - 03 - 1962** மறைவு: **02 - 01 - 1996**

**திதி - பூர்வபட்ஷ 21 - 12 - 1996**

## திருமதி பொன்னுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற மலேயன் பென்சனர் திரு. க. சிதம்பரப்பிள்ளை அவர்களின் மனைவி)

தோற்றம்: **12 - 12 - 1919** மறைவு: **29 - 12 - 1991**

**திதி - அபரபட்ஷ 02 - 01 - 1997**

நீங்காத நினைவுடன் நினைவுகூர்ந்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறையருள் வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி


தங்களை என்றும் நினைவுகூரும்:

**கணவன், மகள் (தரங்கினி), தகப்பன், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், சினேகிதர்கள்.**

**கணவன், மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.**

தற்போதைய வதிவிடம்: க. சிதம்பரப்பிள்ளை
மே / பா. டாக்டர் சி. சதாசிவம்,
சித்தங்கேணி. (43941)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் கனகராசா சுரேஸ்குமார்

[1996 O/L மாணவன், யாழ். சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்]

மலர்வு: **16—03—1980** உதிர்வு: **02—01—1996**

**திதி: 21 - 12 - 1996**

சுரேஸ்குமார் என்றழைக்க காணவில்லை
உன்னையடா; காலன் உன்னைக்
கவர்ந்தனனே கதறுதடா எம்முள்ளம்.
இளவயதினிலே இறைவனடி சேர்ந்துவிட்ட
எம் அரிய செல்வமே, எந்தப்பிறவியில்
உன்னை இனிக்காண்போம்.

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

**ஐயா, அம்மா, அக்காமார், அப்பம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்தப்பா, சித்தி, மதுஷா, உற்றார், உறவினர், நண்பர்கள்.**

தகவல்:
க. கனகராசா (தகப்பன்),
காம்ப் றோட், ஊர்காவற்றுறை. [9079]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இந்தியாவின் நீதித்துறை

இந்தியாவில், உத்தரப் பிரதேசத்தில், அலஹபாத் உயர் நீதி மன்றம் (High Court) இந்திய ஜனாதிபதியின் அறிவிப்பை ரத்துச் செய்து தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

உத்தரப் பிரதேச சட்ட சபைக்கு நடைபெற்ற தேர்தலின் பிரகாரம் மக்கள் அரசு ஒன்று நிறுவப்படுவதைத் தடுக்கும் விதத்தில், அங்கு ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனப்படுத்திய ஜனாதிபதியின் அறிவிப்பும், அதனை நாடாளுமன்றம் ஊர்ஜிதம் செய்தமையும் இந்திய அரசமைப்புச் சாசனத்துக்கு விரோதமான செயல்கள் என்பதே அந்தத் தீர்ப்பாகும்.

பிந்திய செய்திகளின் படி, இந்தத் தீர்ப்பை இடை நிறுத்தி வைக்குமாறு உச்ச நீதிமன்றம் (Supreme Court) உத்தரவிட்டிருக்கிறது.

மக்களாட்சி முறையின் பிரகாரம், ஜனநாயகத்தின் அடிப்படை விதிமுறைகளின் படி, மக்களுடைய இறைமையானது நாடாளுமன்றம் (மக்கள் பிரதிநிதிகளின் சபை), நிறைவேற்று (ஆட்சி) அதிகார இயந்திரம், நீதித்துறை ஆகியனவற்றினூடாகவே பாதுகாக்கப்படுகிறது; செயற்படுத்தப்படுகிறது,

சாதாரண மக்கழ மட்டுமன்றி மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள், ஆட்சி அதிகாரத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லது நியமிக்கப்பட்டவர்கள், எவர் தவறிழைத்தாலும், குற்றம் புரிந்தாலும் அவர்களைத் தண்டிக்கும் அதி உயர் உரிமை பெற்றது நீதித்துறையே.

இந்த வகையில் அண்மைக் காலமாக, மக்கள் பிரதிநிதிகளாக வந்த அரசியல்வாதிகள் இழைத்த தவறுகளையும் குற்றங்களையும் முன்வைத்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவதில் இந்திய நீதித்துறை மிகவும் துணிச்சலுடனும், சுதந்திரத்துடனும் செயற்பட்டு வருகிறது

இப்போது இந்தியச்செய்திகளில் நீதிமன்ற வழக்குகள், தீர்ப்புகள் என்பனவே அதிக எண்ணிக்கையாக உள்ளன.

இதனை மறுபக்கமாக நோக்கும் போது —

மக்கள் பிரதிநிதிகள் என்ற பெயரில் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தவர்கள், உயர் பதவிகளில் அமர்ந்தவர்கள் புரியும் ஊழல் மோசடி, அரசியல் மற்றும் தனிப்பட்ட விருப்புவெறுப்புகளுக்கு ஏற்ப அதிகாரத் துஷ்பிரயோகம் என்பனவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பை நீதித்துறை ஏற்றிருக்கின்றது என்று கொள்ளலாம்.

அதாவது நாட்டை அரசியல்வாதிகள் நாசமாக்காமல், மக்களைச் சூறையாடாமல் தடுக்கும் மக்களின் ஆபத்பாந்தவர்கள் என்ற பாத்திரத்தை இந்திய நீதித்துறை வகித்து வருகின்றது.

இத்தகைய ஒரு நிலை எங்கள் நாட்டிலும் உறுதி செய்யப்படுமாயின் மக்கள் உரிமைகள் செவ்வனே பேணப்படும். இப்போதைய அரசு நீதித்துறையில் தலையிடாது என்று ஜனாதிபதி இரண்டொரு நாள்களுக்கு முன்னர் நிகழ்த்திய உரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

அது செயல் வடிவம் பெற்றால் நாட்டுக்கு நன்மைகள் பல விளையும்.

## கப்பலில் எடுத்துவரப்பட்ட சிமெந்து ஒருமாதமாகியும் இறக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கென 'ரீயூனியன்' கப்பலில் எடுத்து வரப்பட்ட சுமார் 6 ஆயிரம் பைக்கெட் சிமெந்து, ஒரு மாதமாகியும் இன்னும் இறக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப சமாசத்தினூடாக சிமெந்தைப் பெற்று கட்டடத் திருத்த வேலைகளைச் செய்வதற்கு சமாசத்துக்கு விண்ணப்பித்த, வட பகுதிப் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் உட்பட பல நிறுவனங்கள் சிமெந்தை இறக்குவதில் ஏற்பட்டுவரும் தாமதத்தால் விசனம் அடைந்துள்ளன.

திருத்த வேலைகள் தாமதமடைந்து வருவதால் வருட முடிவு நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவற்றுக்கென ஒதுக்கப்பட்ட நிதி திருப்பப்பட்டு விடலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## போட்டிப்பரீட்சை

கிராம சேவை உத்தியோகத்தர் தரம் இரண்டுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர் வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் உட்பட நாடு முழுவதும் நடைபெற இருக்கின்றது.

இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்ட விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே யாழ். கல்வித் திணைக்களத்தினால் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன (இ-4-15-30-51)

## ஆணைக்குழு முன் சிறிசேன கூரே

கொழும்பு. டிச. 21

லலித்அத்துலத் முதலி படுகொலை பற்றி ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுமுன்னிலையில் முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே ஜனவரி 9ஆம் திகதி ஆஜராவார்.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி திஸ்ஸ டயஸ் பண்டாரநாயக்கா தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு இது சம்பந்தமான உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (இ-3)

சந்திரிகாவின் "அரசமைப்புப் புரட்சி" அறிவிப்பால்

## இனப்பிரச்சினை தீர்வு முறையில் ஐ.தே.கவின் நிலைப்பாடு மாற்றம்?

கொழும்பு, டிச. 21

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவின் "அரசமைப்புப் புரட்சி" என்ற அறிவிப்பையடுத்து ஐ. தே. க தலைமைப் பீடத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக "த ஐலண்ட்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய பிரச்சினைகளில் ரணிலும், சந்திரிகாவும் இணைந்து செயல்பட வழி வகுக்கும் வகையில், ரணில் விக்கிரமசிங்காவையும், கட்சியையும் மேடைகளில் தரம் குறைவாகப் பேசுவதை சந்திரிகா நிறுத்த வேண்டும் என்று ஐ. தே. க. தலைமைப் பீடம் விரும்புகின்றது என்றும்—

ஐ. தே. கவை மதித்து அரசு நடக்கும் பட்சத்தில், சந்திரிகாவும் ரணில்விக்கிரமசிங்காவும் சந்தித்துப் பேசி புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும் என்று நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகா பதவியேற்றபின் இரு தடவைகளே ரணிலைச் சந்தித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியா அல்லது பேச்சு நடத்தாமலா தீர்வு காணப்போகிறது. இதனை அரசாங்கம் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார்.

ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமணுகுமுறையை அரசு கடைப்பிடிக்குமானால் அந்தத் தீர்வு யோசனைக்கு ஐ. தே. க ஆதரவு அளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3-150)

## 3 படையினரை காணவில்லை

கொழும்பு, டிச. 21

புளுக்குனாவ அதிரடிப் படைமுகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலையடுத்து மூன்று அதிரடிப் படையினரை இன்னும் காணவில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் திஸ்ஸ ஜயதுங்க தெரிவித்தார். (இ-3)

## காய்ச்சலால் நால்வர் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். குடாநாட்டில் தற்போது காய்ச்சலின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

அதிலும் வடமராட்சிப் பகுதியில் இது மிகவும் கூடுதலாகப் பரவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சிப் பகுதியில் கொற்றாவத்தை சமரபாகு, அல்வாய் கிராமங்களில் கடந்த வாரம் காய்ச்சலினால் நால்வர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியிலும், தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சில இடங்களில் குடும்பம் முழுவதுமே காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

அல்வாயில் சின்னத்தம்பி சின்னத்தங்கச்சி (வயது63)

சமரபாகுவில் முருகன் தங்கம் (வயது 55)

கொற்றாவத்தையில் இரத்தினம் காந்தம் (வயது 58) (இவரது குடும்பத்தில் மேலும் மூவர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர்)

வல்வெட்டியில் திருமதி சேனாதி (வயது 60) ஆகியோரே காய்ச்சலினால் மரணமடைந்தவர்கள் ஆவர். (இ-15)

## மத்திய அரசுக்கு கருணாநிதிகடிதம்

சென்னை, டிச. 21

இலங்கை கடற்படையால் அண்மையில் இரு இந்திய மீனவர்கள் சுடப்பட்டது குறித்து நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தி தாம் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருப்பதாக தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (இ-4)

## தற்கொலைக் குண்டுதாரி அடையாளம் காணப்பட்டாராம்

கொழும்பு, டிச. 21

களுவாஞ்சிக்குடியில் சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரின்டென்ட் உபாலி சஹபந்துவின் கொலைக்குக் காரணமான தற்கொலைக் குண்டுதாரியின் பெயர் ஸ்ரீபதி என்று "தினமின" சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீபதி மட்டக்களப்பு, காரைதீவைச் சேர்ந்தவர் என்றும் —

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கரும்புலிப் படைப்பிரிவைச் சேர்ந்தவர் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் குண்டுடன் வந்து உபாலி சஹபந்துவின் ஜீப்புடன் இவர் மோதியது தெரிந்ததே. (இ-10)

## தொழில் வங்கி மூலம் வேலை

யாழ். மாவட்டத்தில் தொழில் வங்கி என்னும் செயல் திட்டத்தின் மூலம் பலருக்குத் தொழில் வழங்குவதற்கு யாழ். செயலகம் முன்வந்துள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயம்.

இத்தொழில் வங்கித் திட்டத்தின் மூலம் ஜீ. சீ. ஈ சாதாரணதர, உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் வைத்து தொழில்களுக்கு ஆட்சேர்க்கும்போது அதிகபெறுபேறுகள் எடுத்து பல்கலைக்கழகம் செல்ல ஆயத்தமாகவுள்ள, கற்றுக்கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கு தொழில் வழங்கப்படுகிறது. இதனால் குறைந்த பெறுபேறுகள் எடுத்த மாணவர்களுக்கு இந்தத்தொழில் வங்கி மூலம் தொழில் கிடைப்பது என்பது முயற்கொம்பாகவே முடியும். நீண்ட காலத்தின் பின்னும் கிடைக்குமோ என்ற ஏக்கம் பலரிடம் நிலவுகிறது.

நல்ல பெறுபேறுகள் எடுத்தவர்கள் எப்படியோ பல்கலைக்கழகம் சென்று தமது பல்கலைக்கழகக் கல்வியை முடித்து ஒரு தொழில் புரிய சந்தர்ப்பம் உண்டு. ஆனால் குறைந்த பெறுபேறுகளுடன் உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு இத் தொழில் வங்கிச் சந்தர்ப்பம் பலத்த ஏமாற்றமாகவுள்ளது.

எஸ். என். சொரூபன். ஆவரங்கால்.

ப. சுதன். மீசாலை.

### வாசகர் திருமுகம்

## கப்பலில் வரும் பொருளைப் பெற புதிய நடைமுறை அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிச. 21

கொழும்பில் இருந்து பொருள்களைக் கப்பலில் ஏற்றி வருபவர்கள் பொருள்களை ஏற்றியதற்கான சான்றிதழை செயலக புனர்வாழ்வுப் பிரிவில் சமர்ப்பித்தால் மட்டுமே அவர்களிடம் பொருள்கள் ஒப்படைக்கப்படும்.

இப்படி செயலக புனர்வாழ்வுப் பிரிவு நிர்வாக உத்தியோகத்தர் வி. விக்னேஸ்வரமூர்த்தி தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் பொருள்களை எடுத்து வருபவர்களுக்கு அவர்கள் கப்பலில் ஏற்றிய பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கு வசதியாக இந்த முறை நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

கப்பலில் ஏற்றிய பொருள்கள் தொடர்பா[illegible] சீட்டுக்களோ, சரக்கு அனுமதிப்பத்திரமோ சமர்ப்பித்து பொருள்களைப் பெற முடியாது என்றும்—

கப்பலில் பொருள்களை ஏற்றியதற்கான சான்றிதழை (Boat Note) சமர்ப்பித்தால் மட்டுமே பொருள்கள் கையளிக்கப்படும் என்றும்— அவர் தெரிவித்தார். [இ-3]

## நாளை

**மார்கழி 7**

ஞாயிற்றுக்கிழமை

**திதி:** திரயோதசி பின் இரவு 1.09 வரை.

**நட்சத்திரம்:** கார்த்திகை முன் இரவு 7.07வரை.

பிரதோஷ, கார்த்திகை விரதம்

**ராகுகாலம்:** 4.55-6.25

**சுபநேரம்:** 9.25-10.55

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பாதையின் அவல நிலை

அச்சுவேலி — சங்கானை வீதி தற்பொழுது மூடப்பட்டுள்ளது. அதனால் பொது மக்கள் அச்சுவேலி புனித சூசையப்பர் கோயிலுக்கு முன்பாகச் செல்லும் பாதையையே பயன்படுத்தி வருகின்றார்கள்.

அப்பாதை ஓர் ஒழுங்கையாகும். மழைக் காலத்தில் சேறும் தண்ணீரும் நிரம்பி உள்ளதால் பல முதியவர்கள் அவ்வழியால் செல்லும் போது சறுக்கி விழுவதைக் காண முடிகிறது. மாணவ மாணவிகளும் கால்களில் சேற்றுடனேயே பாடசாலைக்குச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

எனினும் அதிகாரிகள் இவற்றைக் கண்டும் காணாதவர்களாக இருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒழுங்கையைத் திருத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அச்சுவேலி பிரதேச சபையாவது இது விடயத்தில் நடவடிக்கை எடுத்து மக்களின் அவல நிலையைப் போக்க முன்வர வேண்டும்.

ஸ்ரனிஸ்லோஸ் கிளெமென்ற்

அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி சோமபாலா
(பேபி)

சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி சோமபாலா 18-12-96 இல் திருகோணமலையில் காலமானார்.

இவர் Dr. K. C. சோமபாலாவின் (மாகாணப் பணிப்பாளர், மிருக வைத்திய திணைக்களம், திருகோணமலை) பாசமிகு மனைவியும், ஜகத்ஜயன், (பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன்), சரத்ஜயன் (பேராதனை பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவன்), நிரஞ்ஜயன் (கட்டுப்பெத்தை பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி த. குலசேகரம் (அதிபர், G. T. M. S. நுணாவில்), திருமதி மு. பாலச்சந்திரன் (ஓமான்), குருசாமி, சிவசுப்பிரமணியம், சிவகிருஸ்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜதீர்த்தனன், உத்ஜயனி, கீதார்த்தனன், கணரூபன், சௌமினி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19- 12- 96 இல் திருகோணமலையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர்

உப்புவெளி அரசாங்க பண்ணை,
திருகோணமலை.
(சி/3781)

## க. சின்னத்துரை ஆச்சாரி
(தாவடி)

தாவடியைப் பிறப்பிடமாகவும் தற்போது மல்லாவியில் வசித்தவருமாகிய க. சின்னத்துரை ஆச்சாரி 14-12-96 இல் காலமானார்.

அன்னார் சொர்ணம்மாவின் அன்புக் கணவரும் ஐயம்பிள்ளை, காலஞ்சென்ற வல்லிபுரம், தெய்வானை, அன்னம்மா, சின்னம்மா, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருச்செல்வம், புவனேஸ்வரி, புஸ்பலீலா, தவமணி, வனிதாமணி ஆகியோரின் தகப்பனாரும், இராமச்சந்திரன், சொர்ணலிங்கம், ரஞ்சன், தெய்வேந்திரன், சவுந்தலாதேவி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் மல்லாவியில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்;
திருமதி பு.இராமச்சந்திரன்
(மகள்)

மானிப்பாய்.
(சி/3778)

## திரு. வேலுப்பிள்ளை மகாலிங்கம்
(வர்த்தகர் - கெக்கிராவை)

இணுவில் கிழக்கு, காரைக்கால் சிவன் கோயிலடியைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை மகாலிங்கம் 11-12-96 இல் கெக்கிராவையில் காலமானார்.

அன்னார் உருத்திரகுமாரியின் அன்புக் கணவரும் நிறைஞ்சனி, மயூதரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற தம்பித்துரையினதும், மங்கையர்க்கரசியினதும் அருமை மருமகனும், தர்மராசா (G. M அளவெட்டி), செல்வராசாத்தி, சிவலிங்கம், காலஞ்சென்ற வரதராசா ஆகியோரின் சகோதரனும், புனிதவதி மங்களேஸ்வரன், சகலகலாவாணி (ஆசிரியை, உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை), மனோகரி, விசயலட்சுமி (சுவிஸ்), யோகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், புனிதவதி, பாலசுப்பிரமணியம் (முன்னாள் சிவாஸ் கூல்பார், சுன்னாகம்), யோகமணி, இரத்தினம் (மின்சார சபை, யாழ்ப்பாணம்), கமலபூபதி, தேவகரன் (நீதி மன்று, மல்லாகம்), துரைரத்தினம், பத்மநாதன் (சுவிஸ்) ஆகியோரின் சகலனும், பாலகுமார் (M. C. S. சுன்னாகம்), செல்வகுமார், யசோதா, விஜிகுமார், ரமேஸ்குமார், கௌரி, கார்த்திகா, கௌரிகாந்தன், காயத்திரி ஆகியோரின் சிறிய தகப்பனாரும், தீபன், லக்ஷ்மன், ஹரிதரன், சுயந்தன், ருசாந்தினி, புரந்தரா, ரிசிகேசன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் பவதாரணி, கிருஷ்ணவேணி (டென்மார்க்), பாலமுரளி (ஜேர்மனி), மோகனதாஸ், பாலஅபிராமி, சுபரஞ்சனி, சதீஸ்வரன் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-12-96 புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கெக்கிராவையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
மங்களேஸ்வரன் (மங்களம்)
(மைத்துனன்)

[9104]

மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சமய சந்நிதிகளில்

நல்லூர் கந்தசுவமி கோயிலில் நாளை பிற்பகல் 4.30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசைகளுடன் கார்த்திகைத் திருவிழா நடைபெறும். [அ-30]

★ ★ ★

நல்லூர் சிவன்கோயிலில் இன்று காலை 5.30 மணிக்கு விசேட அபிஷேகம் பூசைகளுடன் பிட்டுக்கு மண் சுமந்த உற்சவம் சிறப்பாக நடைபெறும். அதனைத் தொடர்ந்து திருவெம்பாவைத் திருவிழா இடம்பெறும். [அ-30]

★ ★ ★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நாளை காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை திருவாசக முற்றோதல் நடைபெறும். [அ-30]

★ ★ ★

கொக்குவில் மாத்தனை ஸ்ரீ கந்தசாமி ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் திருவாசகம் முற்றோதல் நடைபெறும். (அ)

★ ★ ★

வழக்கம்பரை பஜனைச் சபையினர் வெளியிட்டு வரும் அபிராமி அந்தாதி ஆய்வுரைத் தொடரில், —

74, 75, 76 ஆம் செய்யுள்களுக்கான ஆய்வுரை, வழக்கம்பரை அம்மன் கோயிலில் திருவெம்பாவைப் பூசையை அடுத்து, இன்று காலை வெளியிட்டு வைக்கப்படும். (அ-28)

★ ★ ★

யாழ். ஈச்சமோட்டை ஸ்ரீ ரசிம்ம ஞான வைரவ ஆலயத் திருவெம்பாவை உற்சவத்தையொட்டி நாளாந்தம் காலை 5.00 மணி தொடக்கம் 7.30 மணி வரை ஆலயச் சுற்றாடலில் உள்ள வீதிகளில் பஜனை நடைபெற்று வருகிறது. [அ-30]

## பூலான்தேவி ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்ய வேண்டாமென்று உத்தரப்பிரதேச மாநில அரசாங்கம் தாக்கல் செய்த மனு ஒன்றையும் அலஹாபாத் மேல்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

முன்னர் பூலான்தேவிக்குநீதிமன்றம் வழங்கிய நம்பிக்கை வாக்குறுதி காலாவதியாகி விட்டதால் அவர் இப்போது கைது செய்யப்பட வேண்டுமென்று அலஹாபாத் மேல் நீதிமன்ற நீதியரசர் ஜி. எஸ் என். திருப்பதி தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

தம்மைக்கோஷ்டியாகக் கற்பழித்தார்கள் என்று குற்றஞ்சாட்டி 1981 ஆம் ஆண்டு 22 ஆண்களை இவர் கொலை செய்தார் என்பதும் இவர் மீதான குற்றச்சாட்டுக்களில் ஒன்றாகும். (இ-5)

## துப்பாக்கி . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேரிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் —

சம்பவதினம் இரவு முகாமில் இருந்து தப்பி ஓட முயற்சித்த வேளை சுடப்பட்டு மரணமானதாகவும் —

மறுநாள் காலை இவரைத் தேடிச் சென்ற பெற்றோருக்கு இராணுவத்தால் இது குறித்து தெரிவிக்கப்பட்டதாகவும் — கூறப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனையின் நிமித்தம் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரிப் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தின் பின்பக்கக் கழுத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்கான அடையாளம் காணப்பட்டது. (இ-15)

# ஜெயலலிதா சொத்துக்கள் அவரது தாத்தா கொடுத்ததாம்!

சென்னை, டிச. 21

ஜெயலலிதாவின் வீட்டில் சோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்ட நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் அவரால் சம்பாதிக்கப்பட்டவை அல்லது மைசூர் மன்னர் குடும்பத்திற்கு டாக்டராக இருந்த அவரது தாத்தாவிடமிருந்து வாரிசுச்சொத்தாக அவருக்குக் கிடைத்தவை என அ.தி.மு.க. தெரிவித்துள்ளது.

இந்தச் சொத்தை எல்லாம் ஜெயலலிதா 1991 க்குப் பின்னர் தான் சேர்த்தார் எனக் காண்பிக்க அதிகாரிகள் முயல்வதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

அதேசமயம் ஜெயலலிதா தம் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச் சாட்டுக்களை மறுத்துள்ளார்.

தாம் சம்பந்தப்பட்டவெளிநாட்டு ஊழல் முதலீடுகள் ஆயிரம் கோடிரூபாய்க்குமேல் இருக்கும் என லஞ்ச ஊழல் ஒழிப்புத்துறை தெரிவித்திருப்பதை திட்டமிடப்பட்ட கற்பனை எனஅவர் வர்ணித்துள்ளார்.

(இ-10)

# விசர்நாய்க்கடிக்கான ஊசி மருந்து யாழ். ஆஸ்பத்திரியில் இல்லை

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் விசர் நாய்க் கடிக்கான தடுப்பு ஊசி மருந்து (ஏ. ஆர். வி.) முடிவடைந்ததால், விசர் நாய்க்கடிக்கிலக்கான பலர். இந்த ஊசியைப் போட்டுக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மொத்தம் 5 தடவைகள் இந்த ஊசியைப் போட வேண்டும்.

விசர்நாய்க் கடிக்கிலக்கான 35 க்கும் மேற்பட்டோர் யாழ். போதனா வைத்திய சாலையில் இந்த ஊசி மருந்தைப் போட்டு வந்தனர். மருந்து முடிவடைந்ததால் தொடர்ந்து போட முடியாத நிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அத்துடன் புதிதாக விசர்நாய் கடித்தவர்களும் ஊசிபோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையில் இந்த மருந்து முடிவடைந்ததும், யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவு மருந்துக்களஞ்சியத்தில் இருந்து இந்த மருந்தைப் பெற்று போட்டு வந்ததாகவும், தற்போது இரு இடங்களிலுமே இம் மருந்து முடிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றும், விசர் நாய்க் கடிக்கிலக்கானகாரைநகரைச் சேர்ந்த மூவர் ஏ. ஆர். வி. போடுவதற்கென யாழ். போதனா வைத்திய சாலைக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பினர்.

(இ- 15)

## காணாமற்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும், விசேட விசாரணைக் குழு ஜனவரி நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வந்து நேரில் விசாரணைகளை நடத்தும்.

பின்வரும் விவரங்கள் கொண்ட படிவம் ஒன்றைத் தயாரித்து விசாரணைக் குழுவுக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது:-

1. காணாமற் போனவரின் முழுப்பெயர்.
2. விலாசம்.
3. அடையாள அட்டை இலக்கம்.
4. பிறந்த திகதி.
5. வயது.
6. கைது செய்யப்பட்ட தினம்.
7. முறைப்பாட்டாளர் பெயர்.
8. கைது செய்யப்பட்டதைத் தெரிவித்த சாட்சியின் பெயர்.

இந்த விவரங்களை (கூடியளவு) ஆங்கில மொழியில் எழுதி —

பந்துல குலதுங்க, தவிசாளர், விசாரணைச் சபை, பாதுகாப்பு அமைச்சு, 15/5, பாலதஷ் மாவத்த, கொழும்பு -3 '' எனும் முகவரிக்கு அனுப்புமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்

(அ-இ-3)

## தமிழர் கைது

கொழும்பு, டிச. 21

போலி அடையாள அட்டையைக் காட்டி கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைய முயன்ற ஒருவரை இராணுவ தகவல் சேகரிக்கும் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

ஆள்பதிவு திணைக்கள ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுத்து இந்த அடையாள அட்டையை இவர் பெற்றுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

முத்துக்குமார் கணேஷ் என்ற இந்த சந்தேக நபர் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

## நாடாளுமன்றகுழு தலைவர் தெரிவு ஜன. 3 இல்

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கான தெரிவு அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நரசிம்மராவ் ராஜினாமாச் செய்ததை அடுத்து இந்த வெற்றிடம் ஏற்பட்டது தெரிந்ததே.

(முன்வந்த செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## தமிழ்நாட்டில் ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொறுப்பை வகிக்கும் கிருஷ்ணகாந் வெளியிட்டுள்ளார்.

பகிடி வதை செய்யும் மாணவர்களுக்கு 2 வருடகாலச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா வரை அபராதமும் விதிக்க சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் பகிடிவதை குற்றச் சாட்டின் பேரில் தண்டிக்கப்படும் மாணவர்கள் தாம் பயிலும் கல்வி நிலையங்களில் இருந்து நீக்கப்படுவதுடன் வேறு எந்த ஒரு கல்வி நிலையத்திலும் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

பகிடிவதை பற்றிய தகவல் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களின் நிர்வாகங்கள் அது பற்றி விசாரித்து சம்பந்தப்பட்ட மாணவரைத் தற்காலிகமாக நீக்கம் செய்யவேண்டும் என்றும்—

இந்த நடவடிக்கையை எடுக்கத் தவறும் நிர்வாகங்களுக்கும் தண்டனை விதிக்க இந்த அவசர சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவத்துறை மாணவர் ஒருவர் மிகக் குரூரமான முறையில் பகிடிவதை செய்யப்பட்டதாகவும் —

பிறகு அவர் படுகொலை செய்யப்பட்டதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மற்றொரு மாணவன் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org